பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் எடுத்துரைத்து, கடுமையான நிபந்தனைகளை விதித்து, அதுவும் உச்ச நீதிமன்றமே இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது என்ற நிலையில், அதற்குரிய சீராய்வு மனுவைத் தாக்கல் செய்யும் முயற்சியில் அரசு உடனடியாக ஈடுபட வேண்டுமென்று எங்கள் உறுப்பினர் ஒரு கோரிக்கையை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அதையொட்டி நான் கேட்க விரும்புவது, எப்படி தமிழர்களுடைய பண்பாட்டு விளையாட்டாக இருக்கக்கூடிய ஜல்லிக்கட்டு பிரச்சினை வந்த நேரத்திலே சட்டமன்றத்திலே உடனடியாக ஓர் அவசர தீர்மானத்தை நிறைவேற்றி, அதன் மூலமாக நாம் அறிவுறுத்தியிருக்கிறோமோ, அதேபோல இந்தப் பிரச்சினையிலும்—அதாவது ஒரு விளையாட்டு, தமிழர்களுடைய கலை பண்பாட்டுத் துறையின் விளையாட்டு—இது வாழ்வாதாரப் பிரச்சினை, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, தயவுகூர்ந்து சட்டமன்றத்திலே அதற்குரிய தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு இந்த அரசு முன்வருமா என்று நான் கேட்க விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி, வேப்பனஹள்ளி, ஓசூர் தொகுதிகளில் யானைகளால் விவசாயப் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், சுருக்கமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி, வேப்பனஹள்ளி, ஓசூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் கர்நாடக, ஆந்திர மாநில எல்லைப் பகுதிகளாக அமைந்துள்ளன. மூன்றில் ஒரு பங்கு வனப் பகுதியைக் கொண்ட இந்த மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் உள்ளன. ஆண்டுதோறும் கர்நாடக மாநிலம் பன்னெர்கட்டா வனப் பகுதியிலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம், தளி அருகேயுள்ள ஜவளகிரி வனப் பகுதிக்கு 200–க்கும் மேற்பட்ட யானைகள் வந்துவிடுகின்றன. நெல், ராகி, வாழை, கோஸ், தக்காளி ஆகியவற்றிற்கு அறுவடைக் காலம் என்பதால், பயிர்கள் நன்கு விளைந்த நிலையில், இப்பகுதிகளிலுள்ள விவசாயப் பயிர்களை*

2019 ஜனவரி 7] [திரு. ஒய். பிரகாஷ்]

தன் உணவுக்காக எடுத்துக்கொள்ளும்போது, சேதப்படுத்தி, நஷ்டப்படுத்தி வருகின்றன. தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களிலும், அதேபோல வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களிலும் உள்ள விவசாயிகள் இந்த காட்டு யானைகளின் பாதிப்புக்கு ஆளாகி வருகிறார்கள். அதேபோல பொதுமக்களும், விவசாயிகளும் காட்டு யானைகளால் தாக்கப்பட்டு, இந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 15 பேருக்கு மேற்பட்டோர் உயிரிழந்திருக்கிறார்கள். அதேபோல் 10–க்கும் மேற்பட்டோர் யானைகளால் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்துள்ளார்கள். இந்தப் பகுதியில் யானைகள் வந்துபோவது சர்வசாதாரணமாகி இருக்கிறது. இதுகுறித்து வனத் துறை அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும், ஆர்ப்பாட்டங்கள் செய்தும் எந்தப் பலனும் இல்லை. வனத் துறை அதிகாரிகளிடம் கேட்கும்போது, அவர்களுக்குப் போதிய ஊழியர்கள் இல்லாததையும், யானைகளை விரட்டுவதற்குண்டான தளவாடங்களும், உபகரணங்களும், வாகனங்களும் இல்லாததையும் காரணமாகக் கூறுகின்றனர். ஆகவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ யானைகள் வருகின்றன, போகின்றன என்று நினைக்காமல் மக்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினையை பாதிக்கக்கூடிய இந்த காட்டு யானைப் பிரச்சினையைத் தீர்க்க, கர்நாடக மாநில பன்னெர்கட்டா வனப் பகுதிக்கு யானைகளை விரட்டியடித்தும், தமிழக எல்லைப் பகுதியில் ஜவளகிரியில் ஒரு check post அமைத்தும், யானைகளைக் கண்காணிக்க ஒரு தனிப் படை அமைத்தும் விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நேற்று மாலை 6–00 மணியளவில் என்னுடைய தளி தொகுதிக்குட்பட்ட பொம்மதாத்தனூர் ஊராட்சியைச் சேர்ந்த வனப் பகுதியில் 20 ஆண்டு காலமாக வனக் காவலராகப் பணியற்றிய மாரப்பன் என்பவர் யானை தாக்கி உயிரிழந்திருக்கிறார். அவர் குடும்பத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிவாரணமும், குடும்பத்தில் ஒருவருக்கு வேலையும் வழங்குமாறு இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல உயிரிழந்த விவசாயிகனின் குடும்பத்திற்கு 25 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல விவசாய நிலங்களுக்கு ஏக்கருக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பிரகாஷ், உட்காருங்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு இப்பொழுது ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3,500/– மட்டும் கொடுக்கிறார்கள். அந்த ரூ.3,500/–ஐயும் வாங்குவதற்குள் ரூ.1,000/– செலவாகிவிடுகிறது. ஆகவே பயிர்ச் சேதங்களை மதிப்பிட்டு ரூ.25,000/–லிருந்து ரூ.1,00,000/– வரை நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–40

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தளி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள், அவருடைய தொகுதி மற்றும் மாவட்டத்தில் யானைகளால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி இங்கே கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கர்நாடக மாநிலத்திலுள்ள பன்னெர்கட்டா தேசியப் பூங்கா மற்றும் காவேரி வன உயிரின சரணாலயப் பகுதிகளிலிருந்து சுமார் 200 எண்ணிக்கையிலான யானைகள் ஒவ்வோராண்டும் அக்டோபர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை தளி, ஜவளகிரி காப்புக் காடுகளில் நுழைந்து, தேன்கனிக்கோட்டை நுகனூர், ஹ ஒடேதுர்கம் மற்றும் ஓசூர் வனச் சரகத்திற்குட்பட்ட சானமாவு செட்டிபள்ளி, கரியானபள்ளி, கும்பலம் போன்ற காப்புக் காடுகளில் முகாமிடுகின்றன. பின்னர், ஏப்ரல் மாதத்தில், கர்நாடக மாநிலத்திற்குட்பட்ட கோலார் வனக் கோட்டத்திற்கும், அருகிலுள்ள ஆந்திர மாநிலத்திற்குட்பட்ட கௌடின்யா வன உயிரின சரணாலயத்திற்கும் சென்று, மீண்டும் மே மாதத்தில் ஏற்கெனவே குறிப்பிட்ட கர்நாடக மாநிலம் பன்னெர்கட்டா தேசியப் பூங்காவிற்கும், காவேரி வன உயிரின சரணாலயத்திற்கும் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன. 29–12–2018 அன்று பன்னெர்கட்டாவிலிருந்து வந்த 29 எண்ணிக்கையிலான யானைக் கூட்டம் உத்தனபள்ளி கிராமத்திற்கு அருகில் முகாமிட்டிருந்ததைத் தொடர்ந்து, மனித உயிர்களைப் பாதுகாக்கும்பொருட்டு, தலைமை*

2019 ஜனவரி 7] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

வனப் பாதுகாவலர், மாவட்ட வன அலுவலர் மற்றும் வனப் பணியாளர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். தலைமை வனப் பாதுகாவலரின் அறிவுரையின்பேரில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட அதிவிரைவு குழு (Rapid Response Team) மூலம் அதிகப்படியான காவல் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு, வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி, பாதுகாப்பாக இரவு 11 மணியளவில் அருகிலுள்ள சானமாவு காப்புக் காட்டிற்குள் யானைகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. காப்புக் காடுகளைவிட்டு வெளியே வரும் யானைகள், வனப் பணியாளர்கள் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர்களால் பட்டாசுகள், தாரை தப்பட்டைகள் மற்றும் டார்ச் லைட்டுகளைக் கொண்டு விவசாய நிலங்களிலிருந்து மீண்டும் காப்புக் காட்டிற்குள் திருப்பியனுப்பப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் ஆணையின்படி, ஓசூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் 7.95 கோடி ரூபாய் செலவில் 265.53 கி.மீ. தூரத்திற்கு யானைபுகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஓசூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 1.95 கோடி ரூபாய் செலவில் 121.20 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. வன உயிரினங்களிடமிருந்து பண்ணை நிலங்களை பாதுகாப்பதற்காக 56.40 இலட்சம் ரூபாய் மதிப்பில் யானைபுகா அகழிகளுக்கான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் யானைகள் வருவதைத் தடுக்கும் நோக்கத்தோடு, தற்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள கிரானைட் உரிமையாளர்களின் உதவியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 80 இலட்சம் ரூபாய் மதிப்பில், 2 கி.மீ. தூரத்திற்கு கல் தடுப்புச் சுவர் அமைத்தல் போன்ற தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நவீன திட்டங்கள் உருவாக்குதல் [Tamil Nadu Innovation Initiative Scheme (TANII)] என்ற திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், நடப்பாண்டில் 2.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் யானைகள் முட்டி மோதினாலும் உடைக்க முடியாத அளவிற்கு இரும்பு வட வேலி (Steel wire rope fence) அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது உறுதியானதா, இல்லையா என்பதைப் பரிசோதிப்பதற்காக முதுமலைக் காட்டில் அதை நிறுவி, தற்போது இருக்கின்ற

பழக்கப்பட்ட யானைகள் மூலமாக அந்த வேலியை முட்டி மோதிப் பார்த்ததில், யானைகளால் அவ்வேலியை ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதால், இப்போது 2.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரும்பு வட வேலி (Steel wire rope fence) அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. யானைகள் நடமாட்டம் பற்றிய அறிவிப்பினை தமிழ், கன்னடம் மற்றும் தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் மூலமும், ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வேட்டைத் தடுப்பு வாகனம் மூலமும் காப்புக் காடுகளைச் சுற்றி வாழும் மக்களுக்கு வன அதிகாரிகள் எச்சரிக்கை செய்து வருகிறார்கள். கால்நடை மேய்ச்சலுக்கோ, விறகு சேகரம் செய்வதற்கோ, காப்புக் காட்டினை ஒட்டியுள்ள விவசாய நிலங்களுக்கு இரவு நேரங்களிலும், பனி மூட்டம் காணப்படும் அதிகாலை வேளையிலும் செல்ல வேண்டாமென பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. காப்புக் காடுகளை ஒட்டியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் கிராம வனக் குழு தலைவர்களின் தொலைபேசி எண்கள் மற்றும் இதர நபர்களின் தொலைபேசி எண்களை சேகரம் செய்து, யானைகளின் நடமாட்டம் குறித்து அவர்களுடன் தகவல் பரிமாற்றம் செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், யானைகளை விரட்டும் நிகழ்வின்போது, உத்தனபள்ளி கிராமத்திற்கு அருகில் தனியார் தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த நெல், ராகி, கரும்பு போன்ற பயிர்களை யானைகள் சேதப்படுத்தியதைத் தொடர்ந்து, அதற்கு உரிய நிவாரணத் தொகையை, நில உரிமையாளர்களுக்கு வழங்க வனத் துறையினர்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வனக் காவலர்கள், வனப் பாதுகாவலர்கள் இல்லை, தேவையான வாகனங்கள் இல்லை என்று சொன்னார்கள். அது தவறான தகவல், அதனை மாற்றிக்கொள்ள வேண்டும். வனக் கோட்டம் மற்றும் வனத் துறைக்குத் தேவையான வனவர்கள், வேட்டைக் காப்பாளர்கள் மற்றும் இதர காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு, 1,127 பேர்களிடமிருந்து நேரடியாக e–Application பெறப்பட்டு

2019 ஜனவரி 7] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

அவர்களுக்கெல்லாம் தேர்வு நடத்தப்பட்டு, யாருடைய தலையீடும் இல்லாமல் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகிற 14 ஆம் தேதி அதற்குரிய ரிசல்ட் வரவிருக்கிறது. இந்த மாத கடைசியில், 31 ஆம் தேதி அன்று எழுத்துத் தேர்வு மற்றும் உடற்தகுதியில் தேர்ச்சி பெற்றவர்களின் விவரங்கள் வரவிருக்கின்றன. இத்தேர்வுகளின் முடிவுகள் யார் தலையீடும் இல்லாமல், தகுதியின் அடிப்படையிலே வரவிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தவறான தகவலை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தேன்கனிக்கோட்டை வனச் சரகம், நுகனூர் காப்புக் காட்டில் குட்டியையும் சேர்த்து 7 எண்ணிக்கையிலான யானைக் கூட்டம் முகாமிட்டிருந்தது. இந்த யானைக் கூட்டம் மாலை, இரவு நேரங்களில் காப்புக் காட்டைவிட்டு வெளியேறி, காப்புக் காட்டிற்கு அருகில் உள்ள கிராமங்களில் விவசாய நிலங்களுக்குச் சென்று, பயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. மேற்படி யானைகளின் நடமாட்டத்தை வனப் பணியாளர்கள் இரவு பகலாகக் கண்காணித்து, காப்புக் காட்டிலிருந்து வெளியேறும் யானைகளை மீண்டும் காப்புக் காட்டிற்குள் அனுப்பும் பணியினையும், தொடர்ந்து பொதுமக்களுக்கு அறிவித்தும் வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி நேற்று 6–1–2019 மாலையில் நுகனூர் காப்புக் காட்டைவிட்டு வெளியேறிய மேற்படி யானைக் கூட்டம், காப்புக் காட்டிற்கு அருகில் உள்ள மலர்சோனை கிராம விவசாய நிலங்களில் பயிர்ச் சேதத்தை ஏற்படுத்தி வந்த நிலையில், அவற்றை மீண்டும் காப்புக் காட்டிற்குள் திருப்பும் பணியினை வனப் பணியாளர்கள் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர்கள் மேற்கொள்ளும்போது, யானைக் கூட்டத்தை அருகில் உள்ள வருவாய் கரடான முள்பிளாட்டிற்கு விரட்டும்போது, மாலை 6–30 மணியளவில், எதிர்பாராத விதமாக கூட்டத்திலிருந்த ஒற்றை யானை ஒன்று 57 வயதான திரு. ந. மாரப்பன் என்ற வனக் காவலரைத் தாக்கியதில் அவர் படுகாயமடைந்திருக்கிறார். உடனடியாக அவரை சக பணியாளர்கள் மீட்டு, அருகில் உள்ள தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றனர். அங்கு திரு. மாரப்பன், வனக் காவலரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே

இறந்துவிட்டதாக அறிவித்தனர் என்பதை இந்தச் சபைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, வன வளத்தையும், வன உயிரினங்களையும், பொது மக்களையும் பாதுகாக்கும் மகத்தான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள வனப் பணியாளர்கள், பணியில் ஈடுபட்டிருக்கும்போது வன உயிரின தாக்குதலால் உயிரிழக்கும் துயர நேர்வுகளிலும், வனக் குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுடனான மோதல்களில் உயிரிழக்கும் நேர்வுகளிலும், வீர, தீரச் செயல் மற்றும் எதிர்பாராத அசம்பாவித சூழ்நிலை போன்ற நேர்வுகளிலும் காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகிற இழப்பீட்டுத் தொகை மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களால், வனத் துறையில் வேலை செய்பவர்களுக்கு 4 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு, அது இப்போது நடைமுறையில் அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரகாஷ் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அவர்கள் ஆட்சிக் காலங்களில் எப்படி பணிகள் மற்றும் நிவாரணங்கள் வழங்கப்பட்டன, பயிர்களுக்கெல்லாம் எப்படி நிவாரணம் வழங்கப்பட்டன என்பதையெல்லாம் சொன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தேவையில்லாமல் நேரத்தை வீணடிக்கிறீர்கள் என்று சொல்வார்கள். எனவே முன்பிருந்த உங்கள் ஆட்சியைவிட 10 மடங்கு அதிகமாக மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களால் 10 இலட்சம் ரூபாய் உயிரிழப்பிற்கும், சேதமடைந்த பயிர்களுக்கும் தேவையான நஷ்டஈடு வழங்கப்பட்டு வருகிறது. அவர் குறிப்பிட்டபடி, யானைகள், கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய 3 மாநிலங்களுக்கும் வருடா வருடம் சென்று வருகின்றன. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் அறிவித்த இந்த இரும்பு வட வேலி அமைக்கும் திட்டத்தின் மூலமாக யானைகள் முட்டி, மோதி எப்படியாவது அந்தப் பகுதிக்கு வராமல் தடுப்பதற்கு ஓர் அரண் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த வருடம் அது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்குரிய நடவடிக்கையை வனத் துறையினர் எடுத்து வருகின்றனர் என்ற செய்தியை

2019 ஜனவரி 7] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) கேள்வியா? எதற்கு கேள்வி? (குறுக்கீடு) அவர்தான் நிறைய சொல்லிவிட்டாரே! (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர் யானை குறித்து நிறைய சொல்லிவிட்டார். அவர்தான்,* fencing *நன்றாகப் போட்டிருப்பதாகச் சொன்னார் அல்லவா! (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள்* Inter–State border*–ஐ* cross *செய்கின்றன என்பது ஒன்று.* Forest *எல்லையைத் தாண்டி வருவது என்பது மற்றொன்று. அவை* Inter–State border*–ஐ* cross *செய்வதைத் தடுப்பதற்கு நீங்கள்* check post *போடுவீர்களோ, என்ன போடுவீர்களோ அது உங்களைச் சார்ந்தது. நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால்* Assembly Committees*–க்கெல்லாம் இதுதான்* main problem. *குழுக்களின் மாவட்ட ஆய்வுப் பயணங்களின்போது, எல்லா ஊர்களிலும் என்ன கேட்கிறார்களென்றால், யானைகள் காட்டிலிருந்து வெளியில் வந்து ஊரை அழிக்கின்றன, பயிரை அழிக்கின்றன என்று சொல்கிறார்கள். யானைகளினுடைய இருப்பிடம் எது? காடு. நம்முடைய இருப்பிடம் நாடு. ஆனால், அது ஏன் காட்டைவிட்டு இங்கு வருகிறது? ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், நம் ஊரில் வேலை கிடைத்தால், ஏன் ஒருவர் துபாய்க்கு செல்கிறார்? இங்கு வேலை கிடைக்கவில்லையென்பதால்தான், துபாய்க்கு போகிறார். அதுபோன்றுதான், காட்டில் அவற்றிற்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை, உணவு கிடைக்கவில்லை. ஆகையினால்தான் அவை நாட்டிற்குள் வருகின்றன. அதற்காக நாம் ஒன்றும் அவற்றிற்கு அங்கே சத்துணவு போட முடியாது. ஆனால், குடிப்பதற்குத் தண்ணீரையாவது அங்கே ஏற்பாடு செய்து கொடுத்திருந்தால், யானைகள் பெரும்பாலும் இந்தப் பக்கம் வராது. இதற்கு முன்பெல்லாம், இந்தப் பிரச்சினை இல்லை. இப்போதுதான் இந்தப் பிரச்சினை இருக்கிறது.*

[திரு. துரைமுருகன்] [2019 ஜனவரி 7

இரண்டாவது, அதற்காக என்ன செய்கிறீர்கள் என்றால், ditch வெட்டுகிறீர்கள். Ditch–ல் இரண்டு தடவை யானைகள் ஏறி, இறங்கின என்றால், யானைகளுக்கு அது சாதாரண வழியாகப் போகின்றது. முன்பெல்லாம் காடுகளையெல்லாம் அழித்துவிடுவார்கள். இப்போது அதுபோன்று இல்லை. காடுகளில் பழம் இருக்கிறது, மரம் இருக்கிறது, புல் இருக்கிறது, grass எல்லாம் நன்றாக வளர்ந்திருக்கிறது. ஆகையினால், யானைக்கு வேண்டிய உணவும் இருக்கிறது. அதற்கு நாம் செயற்கையாக செய்து தரவேண்டியது என்னவென்றால், மழை, தண்ணீர் இல்லாத காலங்களில், காடுகளில் ஆங்காங்கே tank கட்டி வைத்திருந்தோம் என்று சொன்னால், அவை தண்ணீரைக் குடித்துக்கொண்டு அங்கேயே இருந்திருக்கும். இதைப்போன்று ஏதாவது ஒரு திட்டத்தை அரசு செயல்படுத்தியிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு ஒரே பதில், யானைப் பெருக்கம் அதிகமாகிவிட்டது என்பதுதான். (சிரிப்பு) அதுதான் உண்மை. (சிரிப்பு) (குறுக்கீடு) அதுதான் உண்மை. அவர் குழுத் தலைவர் என்ற முறையில், எல்லா மாவட்டங்களுக்கும் செல்கின்றார். உங்களுடைய குழுவின் மூலமாக இதுகுறித்து ஆய்வு செய்து ஆலோசனைகளைச் சொல்லுங்கள். நீங்கள் இந்த மாவட்டத்திற்கும் சென்று, ஒரு research செய்து வேறு ஏதாவது ஆலோசனைகளைச் சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது தடுப்புச் சுவர் கட்டியிருப்பதன் மூலமாக நிச்சயம் யானைகள் வராது. ஆனால், நீங்கள் சொல்லியிருப்பதுபோன்று, குடிநீர்த் தொட்டிகள், அகழிகள் அத்தனையும் சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இதையும் மீறி வரும்போது, அதுகுறித்து ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் சொன்னதுபோல 5 வருடங்கள், 10 வருடங்களில் இல்லாத அளவில் தற்போது யானைக் குட்டிகளின் பெருக்கம் அதிகமாகிவிட்டது. எனவே, அதைக் குறைப்பதற்குரிய வேலைகளில் நாம் அத்தனைபேரும் சேர்ந்தே பணியாற்றுவோம். (சிரிப்பு) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.